**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.95/2022**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.15** |
| **Name** | **:** | **திரு.ஷாபுதீன்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17.11.2023.**

**முதல் விசாரணை -**

**நான் தற்போது ஆரணி கிராமிய காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 20.10.2021ஆம் தேதி ஆரணி கிராமிய காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, வேலூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற மருத்துவமனை தகவலின் பேரில் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக தீக்காய வார்டில் சிசிச்சையில் இருந்த புருஷோத்தமன்,**

த/பெ. வெள்ளை என்பவரிடம் காலை 10 மணிக்கு புகார் வாக்குமூலம் பெற்றேன். அவர் கொடுத்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.15. அ.சா.ஆ.15ல் புருஷோத்தமன் தான் கையொப்பம் போட்டார். கையொப்பம் போடும்போது அவருடைய கைகளில் தீக்காயங்கள் இருந்ததால் புகாரில் உள்ளவாறு கையொப்பம் போட்டுள்ளார்.

புகார் வாக்குமூலம் பெற்று ஆரணி கிராமிய காவல்நிலையம் வந்து ஆரணி கிராமிய காவல்நிலைய குற்ற எண். 1238/2021 பிரிவு 294(பி) 307 506(2) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.16. முதல் தகவல் அறிக்கையை நீதித்துறை நடுவர் ஆரணி அவர்களுக்கு அனுப்பிக்கொண்டேன்.

அவருக்கு தீக்காயம் அதிகமாக ஏற்பட்டிருந்ததால் மரண வாக்குமூலம் பெறவேண்டி நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் வேலூர் அவர்களுக்கு காவல் ஆய்வாளர் உத்தரவுப்படி கடிதம் அனுப்பிக்கொண்டேன். நான் கொடுத்த கடிதம் அ.சா.ஆ.17. இவ்வழக்கை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்துக்கொண்டேன். இதுசம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது இவ்வழக்கில் நான் மேற்கொண்ட நடவடிக்கைகளை காவல் ஆய்வாளரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரி தான். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது வாக்குமூலத்தில் நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் வேலூர் அவர்களுக்கு

மரண வாக்குமூலத்திற்காக கடிதம் அனுப்பியது குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி தான். உதவியாக இருந்ததாக சொல்லியுள்ளேன்.

எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் காலை 9.30 மணிக்கு சென்றேன். மருத்துவமனையில் தகவல் எப்படி வந்தது என்றால் போன் மூலம் வந்தது. போன் மூலம் தகவல் தந்த நபரின் விவரம் என்ன என்றால் தற்போது என்னால் சொல்ல முடியாது. வாக்குமூலத்தை காயம்பட்டவரிடம் எவ்வளவு நேரம் பதிவு செய்தேன் என்றால் 10.00ல் இருந்து 10.30 மணி வரை பதிவு செய்தேன்.

முதல் தகவல் அறிக்கை எப்போது பதிவு செய்தேன் என்றால் 12.00 மணிக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தபிறகு காவல் ஆய்வாளருக்கு எப்போது தகவல் கொடுத்தேன் என்றால் நான் வேலூர் அரசு மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பே தகவல் கொடுத்துவிட்டு சென்றேன். வேலூர் அரசு மருத்துவமனைக்கு காவல் ஆய்வாளர் வரவில்லை என்றால் சரி தான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும்போதே விசாரணை அதிகாரி யார் என்று எனக்கு தெரியும் என்றால் தெரியும்.

புகார் வாக்குமூலம் வேறு, புகார் மனு வேறு என்றால் சரி தான். புகார் வாக்குமூலத்தில் 18.10.2021 அன்று எதிரிக்கும் காயம்பட்ட நபருக்கும் வாக்குவாதம் நடந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரி தான். இறந்தவரின் மனைவி அவரை விட்டு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்து போய்விட்டதாக சொல்லப்படவில்லை என்றால் 8 ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்து சென்றுவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது.

எதிரியானவர் காயம்பட்டவருக்கு ரூ.1,50,000/-கொடுக்கவேண்டும்

என்று புகார் வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றால் கொடுக்கல்வாங்கல் பற்றி சொல்லவில்லை. பாகப்பிரிவினை பிரச்சனை குறித்து சொல்லியுள்ளார். நான் பதிவு செய்ததாக சொல்லப்படும் புகார் வாக்குமூலத்தில் 19.10.2021 அன்று இரவு 11 மணி அளவில் எந்தவொரு சம்பவமும் நடந்ததாக சொல்லப்படவில்லை என்றால் இரவு 11 மணி அளவிற்கு சொல்லப்படவில்லை. இரவு சுமார் 12.30 மணிக்கு சம்பவம் குறித்து சொல்லியுள்ளார்.

என்னால் பதிவு செய்ததாக சொல்லப்படும் புகார் வாக்குமூலத்தில் டயரை கொளுத்தி தூக்கி போட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சொல்லப்படவில்லை. நான் பதிவு செய்ததாக சொல்லப்படும் புகார் வாக்குமூலத்தில் காயம்பட்ட நபர் பக்கத்து மனையில் எகிறி குதித்ததாக சொல்லியுள்ளாரா என்றால் ராஜசேகர் எட்டி உதைத்ததால் கீழே விழுந்ததாக தான் சொல்லியுள்ளார். கீழே விழுந்தபிறகு அங்கிருந்த மக்கள் ராஜசேகரை அடித்ததாக புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை.

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பே காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றால் சரி தான். காயத்தின் தன்மை அதிகமாக இருந்ததால் உடனடியாக பிழைக்க வைக்க முதல்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. நான் வேலூர் அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றாலும், காயம்பட்ட நபரிடம் புகார் வாக்குமூலம் நான் பதிவு செய்யவில்லை என்றாலும், என்னுடைய உயர் அதிகாரியான காவல் ஆய்வாளர் ஆலோசனையின்பேரில்

காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

புகார் வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பம் காயம்பட்ட புருஷோத்தமன் கையொப்பம் அல்ல என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட புகார் வாக்குமூலம் என்பதால் தான் பணி மருத்துவரின் மேலேழுத்தோ கையொப்பமோ, மருத்துவமனை முத்திரையோ காணப்படவில்லை என்றால் புகார் வாக்குமூலம் நானே பதிவு செய்ய இருந்ததால் மருத்துவரின் மேலேழுத்தும், கையொப்பமும், மருத்துவமனை முத்திரையும் அவசியம் இல்லை.

மரண வாக்குமூலம் பதிவு செய்யவேண்டி நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றம் வேலூர் அவர்களுக்கு கடிதம் கொடுப்பதற்கு நான் தகுதியான நபர் அல்ல என்றால் காவல் ஆய்வாளர் உத்தரவின்படி தான் கொடுத்தேன். அவ்வாறு எந்தவொரு கடிதமும் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பப்படவில்லை என்றால் அனுப்பினேன். அவ்வாறு நான் கடிதம் அனுப்பாததால் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் உதவியாக இருந்தது குறித்து சொல்லியுள்ளேன்.

நான் கொடுத்த அ.சா.ஆ.17-ல் ராஜசேகர் எட்டி உதைத்தார் என்ற வாசகம் காணப்படவில்லை என்றால் வேண்டுகோள் கடிதத்தில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. நீதித்துறை நடுவர் வேலூர் அவர்களுக்கு யார் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது என்றால் என்னுடன் காவலர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. நான் இவ்வழக்கில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்துக்கொண்டு சரியான

**நடைமுறைகள் எதையும் மேற்கொள்ளாமல் தவறான நடைமுறையை மேற்கொண்டேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு காவல் ஆய்வாளர் உடன் உதவிக்காக சென்றேனா என்றால் செல்லவில்லை.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.